## கடன் அடைப்பதற்கான துஆ

ஹஜ்ரத் அலி பின் அபீதாலிப் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், முகாதப் எனப்படும் தன்னுடைய விடுதலைக்கான ஒப்பந்தம் செய்துகொண்ட ஒரு அடிமை அவரிடம் வந்து கூறினார், நான் ஒப்பந்தம் செய்துகொண்ட தொகையைக் கொடுக்க இயலாத நிலையில் இருக்கின்றேன், ஆகவே, நீங்கள் எனக்கு உதவி செய்யவேண்டும். அதற்கு, ஹஜ்ரத் அலி (ர) அவர்கள் கூறினார்கள், எனக்கு இறைத்தூதர் ﷺ அவர்கள் கற்றுக்கொடுத்த ஒரு துஆவை நான் உமக்கு சொல்லிக்கொடுக்கின்றேன், அதனை ஓதினால் மலையைப்போன்ற கடனாக இருந்தாலும் அல்லாஹ் அதனை அடைத்துவிடுவதற்கான வழியை ஏற்படுத்தித் தருவான். இந்த துஆவை ஓதுவீராக.

اللَّهُمَّ اكْفِنِي بِحَلاَلِكَ عَنْ حَرَامِكَ، وَأَغْنِنِي بِفَضْلِكَ عَمَّنْ سِوَاكَ

*பொருள்: என் இறைவனே. எனக்கு உன்னுடைய ஹலாலான வாழ்வாதாரத்தைக்கொடுத்து ஹராமானவற்றிலிருந்து பாதுகாப்பாயாக. மேலும், உன்னுடைய அருளால் உன்னைத்தவிர யாருடைய தேவையுமில்லாதவனாக என்னை ஆக்கி வைப்பாயாக (திர்மிதி)*

* * *

www.uzairfalahi.com